095

**இலங்கை திறந்த பல்கலைக் கழகம்**
**தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கைநெறி**
**இறுதிப் பரீட்சை – 2008/2009**
**MCC 1105 - செயற்பாட்டு முகாமைத்துவ அறிமுகம்**
**காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்**

**திகதி : 21.12.2008** **நேரம்: 10.00 மு.ப – 12.00 மதியம்**

**எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு விடை தருக. எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.**

01. அ. நீர் சிறிய அளவிலான உற்பத்தியில் ஈடுபடும், உற்பத்தியாளர் எனக் கருதிக் கொண்டு, செயற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான அறிவானது, உமக்கு எவ்வகையில் பயனுள்ளதாக அமையும் என விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. தற்போது, இலங்கையில் வளர்ந்து வரும் தொழில் முயற்சியாளர்கள் பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இலங்கையில், சிறிய உற்பத்தியாளர்கள் எதிர் நோக்கும் உற்பத்தி தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடுக. (13 புள்ளிகள்)

02. அ. ஒரு உற்பத்தி செயன் முறையின் வெற்றியானது, அது எவ்வாறு திட்டமிட்டு, ஒருங்கிணைத்து, கட்டுப்படுத்தப்படுகிறது என்பதிலேயே தங்கியுள்ளது. உமக்கு பரீட்சயமான ஏதாவது உற்பத்தியை தெரிவு செய்து, அதனை எவ்வாறு திட்டமிட்டு, ஒருங்கிணைத்து, கட்டுப்படுத்துவீர் என விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ பொருள் விருத்தியானது, பொருள் வடிவமைப்பு, பொருள் உருவாக்கம் (Product engineering) ஆகிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. உமக்கு நன்கு தெரிந்த ஒரு பொருளுக்கான வடிவமைப்பை எவ்வாறு உருவாக்கம் செய்வீர் என விளக்குக. (13 புள்ளிகள்)

03. ஒரு உற்பத்தியாளருக்கு, சந்தை (கேள்வி) தொடர்பான தகவல்களின் முக்கியத்துவத்தை விளக்குக. சந்தை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நீர் உபயோகிக்கக் கூடிய மூலங்களை விளக்குக. (25 புள்ளிகள்)

04. அ. எல்லா உற்பத்தியாளர்களும், தமது நிறுவனங்களின் உற்பத்தித் திறனில் அதிகூடிய கவனம் செலுத்துகின்றனர். நீர் ஒரு பாற்பண்ணையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளீர், எனக் கருத்திற் கொண்டு, நீர் எவ்வாறு அந் நிறுவனத்தில் உச்ச உற்பத்தித் திறனை உறுதிப்படுத்துவீர் என வர்ணிக்க. (10 புள்ளிகள்)

ஆ. பின்வரும் தகவல்களானது, மாப்பழ ரச உற்பத்தி தொடர்பானது. நீர் ஒரு மாம்பழ ரச போத்தலுக்கான செலவு அட்டவணையை (cost estimation sheet) தயாரிக்கும்படி கேட்கப்படுகின்றீர்.

- பாவிக்கப்படும் மாம்பழங்கள் - ரூபா. 20 பெறுமதியான 2 மாம்பழங்கள்
- பிரயோகிக்கும் ஊழிய மணித்தியாலங்கள் - 2 ஊழியர்கள், ஒவ்வொருவரும் தலா 2.5 மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும். கூலி மட்டமானது, ஒவ்வொரு ஊழிய மணித்தியாலத்திற்கும் ரூபா 25 யாகும்.
- ஒரு போத்தல் மாம்பழ ரசத்திற்கு ஏற்படும் ஏனைய செலவுகள்
  வலுவும், சக்திக்கான செலவுகள் - ரூபா 30
  ஏனைய உற்பத்திச் செலவுகள் - ரூபா 25 (12 புள்ளிகள்)

இ. 4 ‘ஆ’ வில் குறிப்பிட்ட மாம்பழ ரச உற்பத்தியாளர், உற்பத்திச் செலவுடன் 50% இலாப எல்லையை நிர்ணயிப்பாயாரின், விற்பனை விலையைத் தீர்மானிக்க. (3 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றில் ஏதாவது ஐந்திற்கு (5) சிறு குறிப்பு எழுதுக.

அ. செயன்முறை முகாமைத்துவத்தின் வளர்ச்சிப் போக்கு

ஆ செயன்முறை வடிவமைப்பு (Process design)

இ. வேலை மதிப்பீடு (Work measurement)

ஈ. உற்பத்திசெய்வதா அல்லது கொள்வனவுசெய்வதா என்ற தீர்மானம் (Make or Buy decision)

உ உற்பத்திக் கட்டுப்பாடு முறைமைகள்

ஊ. தளக் கோலத்தீர்மானங்கள் (Plan layout decisions)

(5 x 5 = 25 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)